# 8.10.நம்மைச்சுற்றி நிகழும் மாற்றங்கள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காகிதம் எரிதல் என்பது ஒரு ________ மாற்றம்.

அ) இயற்பியல் ஆ) வேதியியல் இ) இயற்பியல் மற்றும் வேதியியல் ஈ) நடுநிலையான.

2. தீக்குச்சி எரிதல் என்பது ________அடிப்படையிலான வேதி வினைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

அ) இயல் நிலையில் சேர்தல் ஆ) மின்சாரம் இ) வினைவேக மாற்றி ஈ) ஒளி

3. ________ உலோகம் துருப்பிடித்தலுக்கு உள்ளாகிறது.

அ) வெள்ளீயம் ஆ) சோடியம் இ) காப்பர் ஈ) இரும்பு

4. வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பாக மாறுவதற்குக்காரணமான நிறமி ________

அ) நீரேறிய இரும்பு (II) ஆக்சைடு ஆ) மெலனின் இ) ஸ்டார்ச் ஈ) ஓசோன்

5. பிரைன் என்பது ________ இன் அடர் கரைசல் ஆகும்.

அ) சோடியம் சல்பேட் ஆ) சோடியம் குளோரைடு

இ) கால்சியம் குளோரைடு ஈ) சோடியம் புரோமைடு

6. சுண்ணாம்புக்கல் ________ ஐ முதன்மையாகக்கொண்டுள்ளது.

அ) கால்சியம் குளோரைடு ஆ) கால்சியம் கார்பனேட்

இ) கால்சியம் நைட்ரேட் ஈ) கால்சியம் சல்பேட்

7. கீழ்காண்பவற்றுள் எது மின்னாற்பகுத்தலைத் தூண்டுகிறது?

அ) வெப்பம் ஆ) ஒளி இ) மின்சாரம் ஈ) வினைவேக மாற்றி

8. ஹேபர் முறையில் அம்மோனியா தயாரித்தலில் ______________ வினைவேக மாற்றியாக செயல்படுகிறது.

அ) நைட்ரஜன் ஆ) ஹைட்ரஜன் இ) இரும்பு ஈ) நிக்கல்

9. மழை நீரில் கரைந்துள்ள சல்பர் டைஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடுகள் ________ ஐ உருவாக்குகின்றன.

அ) அமிலமழை ஆ) காரமழை இ) அதிகமழை ஈ) நடுநிலைமழை

10. ______________ புவி வெப்பமயமாதலுக்குக் காரணமாகின்றன.

அ) கார்பன் டைஆக்சைடு ஆ) மீத்தேன்

இ) குளோரோ புளூரோ கார்பன்கள்

ஈ) கார்பன் டைஆக்சைடு, மீத்தேன், குளோரோ புளூரோ கார்பன்கள்

LIVEWORKSHEETS